**S.C.No. 141/2024**

**PW1 – Selvi. Manisha Malini**

**15.07.2025**

**(A1 to A3 are present)**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

**நேரம் 15.05 மணி**

என் ஜாதி பெயரை சொல்லி எந்த தேதியில் என்னை திட்டினார்கள் என்றால் 04/06/2023 அன்று திட்டினார்கள். என்னை மரக்கிளையால் அடித்தார்கள் என்று கூறியுள்ளேன் அதற்காக மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்தேனா என்றால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. காவல் நிலையத்தில் புகார் என்று கொடுத்தேன் என்றால் 9ஆம் தேதி ஜூலை 2023ல் புகார் கொடுத்தேன். புகார் கொடுக்க ஒரு மாதமாக காவல் நிலையம் சென்றுவந்தேன். மேல் இடத்தில் புகார் கொடுத்த பின்னர் புகாரை கோப்பிற்கு எடுத்தார்கள். காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்யும் போது 1ஆம் எதிரி என்னை திருமணம் செய்வதாக கூறியும் நான் ஏன் மறுத்தேன் என்றால் அவர்கள் பயத்தினால் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக கூறினார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபிறகும் நான் தான் திருமணம் செய்ய மறுத்துவிட்டேன் என்றால் முதலில் காவல் நிலையத்தில் வைத்து என்னை தோழி என்று தான் கூறினார்கள் பின்னர் நான் நெருக்கமாக இருக்கும் புகைப்படத்தை காட்டியபோது நான் அவருடன் தோழியாக தான் பழகிவந்ததாகவும், என்னை விரும்பவில்லை என்றும் கூறினார். திருமணம் சம்பந்தமாக எதிரியின் வீட்டிற்கு என் பெற்றோரை அழைத்து சென்று நான் பேசினேனா என்றால் இல்லை. என்னுடைய அக்காவிற்கு திருமணமாகிவிட்டதா என்றால் இல்லை. என் அக்கா திருமணத்திற்கு முன் எனக்கு திருமணம் பேசினார்களா என்றால் இருவருக்கும் பார்த்தார்கள். நான் எந்த மதம் என்றால் இந்து மதம். நான் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுவதால் எதிரியை கிறிஸ்தவ மதத்திற்கு மாற கூறியதால்

அவர் மாறாததால் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்கு வருடங்களாக ஒருவரை ஒருவர் விரும்பியுள்ளோம். எதிரி என்னை ஜாதி குறித்து இழிவாக பேசியதற்காகவும், என்னை மரக்கிளையால் அடித்ததற்கும் வீடியோ ஏதாவது உள்ளதா என்றால் என் சென்போனில் பதிவுசெய்திருந்தேன் பின்னர் என் செல்போன் தொலைந்துவிட்டது. புகார் கொடுத்து என் செல்போன் திரும்ப கிடைத்தது. அப்போது வீடியோ எதுவுமில்லை. புகார் கொடுத்ததற்காக சிஎஸ்ஆர் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ஆம் எதிரி என்னுடன் பலமுறை உடலுறவு வைத்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் அதற்காக மருத்துவ பரிசோதனைக்கு சென்றேனா என்றால் புகார் கொடுத்தவுடன் அழைக்கவில்லை. 1வருடம் கழித்து தான் என்னை அழைத்தார்கள் ஆகவே நான் செல்லவில்லை. 1 வருடம் கழித்து போலீசார் அழைத்திருந்தாலும் நான் சென்றிருக்கவேண்டும் என்றால் எங்கள் வீட்டில் செல்லவேண்டாம் என்று கூறிவிட்டார்கள். 1ஆம் எதிரி என்னுடன் உடலுறவு வைத்துக்கொள்ளவில்லை என்றாலும் நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் மேற்கூறிய சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்று கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். 1ஆம் எதிரி என்னை உண்மையாக விரும்பவில்லை என்றாலும் ஆகவே தான் காவல் நிலையத்தில் 1ஆம் எதிரி என்னை திருமணம் செய்துகொள்கிறேன் என்று கூறியபோதும் நான் திருமணம் செய்ய மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரி என் ஜாதி பெயரை சொல்லி திட்டிதாகவோ, மரக்கிளையால் அடித்ததாகவோ, மேற்படி ஒருசம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் காலதாமதமாக எதிரியை பழிவாங்க வேண்டும் என்று பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2020வருடத்திற்கு பிறகு எனக்கும் 1ஆம் எதிரிக்கும் எந்தவித பேச்சுவார்த்தையும் இல்லை என்றாலும் 2023ஆம் வருடம் 1ஆம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது

1ஆம் எதிரி என்னை திருமணம் செய்ய தயாராக இருக்கிறார் என்றால் நான் திருமணம் செய்துகொள்ள தயாராக இல்லை.

**<u>நேரம் 15.20 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**<u>S.C.No.</u> 141/2024**

**PW2 – Tmt. Jayanthi w/o. Subramani**

**15.07.2025**

**(A1 to A3 are present)**

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை</u>**

**<u>நேரம் 15.20 மணி</u>**

என்னுடைய இரண்டு மகள்களில் முதல் மகளுக்கு திருமணம் செய்வதற்கு முன்பதாக இரண்டாவது மகளுக்கு ஏன் வரன் பார்த்தேன் என்றால் முதல் மகள் இன்னும் படித்துக்கொண்டிருக்கிறார். தற்போது முதல் மகளுக்கும் திருமணமாகவில்லை. என்னுடைய இரண்டாவது மகள் திருமணத்திற்காக எதிரிகள் வீட்டிற்கு சென்று திருமணம் சம்பந்தமாக பேசினேனா என்றால் இல்லை. எதிரிகள் என் இரண்டாவது மகளை அடித்து ஜாதி பெயரை சொல்லி அவதூறாக எந்த தேதியில் பேசினார்கள் என்றால் 17/06/2019 அன்று பேசினார்கள். 2ஆம் எதிரி என் இரண்டாவது மகளை மரக்கிளையால் அடித்ததாக கூறியுள்ளேன் ஏதாவது காயம் ஏற்பட்டதா என்றால் கையிலும், முதுகிலும் வீங்கி இருந்தது. மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் 09/07/2023 அன்று புகார் கொடுத்தோம். 3 வருடம் காலதாமதமாக புகார் கொடுத்த என்ன காரணம் என்றால் திருமணம் செய்துகொள்ள மாட்டோம் என்று கூறியதாகல் புகார் கொடுத்தோம். நான் எந்த மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். எதிரியை கிறிஸ்தவ மதத்திற்கு மாற கூறி எதிரி மறுத்துவிட்டதால் நாங்கள் என் மகளை எதிரி திருமணம் செய்துவைக்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியை என் மகள் உண்மையாக விரும்பவில்லை ஆகவே தான் 1ஆம் எதிரியின் பெற்றோரை சந்தித்து வரன்பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கும் வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள்

மீது பொய் புகார் கொடுத்து எதிரிகள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**நேரம் 15.30 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**S.C.No. 141/2024**

**PW3 – Tmt. Rudra Rubini,**

**15.07.2025**

**(A1 to A3 are present)**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

**நேரம் 15.30 மணி**

என் முதல் விசாரணையில் என் தங்கை என் வீட்டில் அழுது கொண்டிருந்தார் எந்த தேதியில் அழுதார் என்றால் எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை. என் திருமணத்திற்கு முன்பு என் தங்கையின் திருமணம் குறித்து பேசவில்லையா என்றால் நான் தான் சம்பாதித்துக்கொண்டிருந்தேன். ஆகவே எனக்கு முன்பதாக அவருக்கு திருமணத்திற்காக வரன் பார்த்தார்கள். என் முதல் விசாரணையில் என் தங்கையை 1ஆம் எதிரியின் தந்தை என் தங்கையின் ஜாதியின் பெயரை சொல்லி திட்டி அடித்ததாக கூறியுள்ளேன். என் தங்கையின் முதல் விசாரணையில் 1ஆம் எதிரியின் தாயார் தான் ஜாதியின் பெயரை சொல்லி திட்டி அடித்ததாக உள்ளது என்றால் எதிரிகள் 3 பேரும் ஜாதியின் பெயரை சொல்லி திட்டி அடித்தார்கள். நான் இந்து மதத்தை பின்பற்றுகிறேன். எதிரியை கிறிஸ்தவ மதத்திற்கு மாற கூறி எதிரி மறுத்துவிட்டதால் நாங்கள் என் தங்கையை எதிரி திருமணம் செய்துவைக்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் விசாரணையின் போது 1ஆம் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து காலில் விழுந்தால் புகாரை திரும்ப பெற்றுக்கொள்வதாக கூறினேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் என் தங்கையை யார் என்றே தெரியாது என்றும், பின்னர் புகைப்படம் காண்பித்தபிறகு நண்பர் என்றும், பின்னர் என் தங்கையை 1ஆம் எதிரி விரும்பவில்லை என்றும், பின்னர் காவல் நிலையத்தில் வைத்து அவர்களுக்குள் பேசிக்கொண்டு 1ஆம் எதிரி என் தங்கையை திருமணம் செய்துகொள்வதாக கூறினார். எங்களுக்கு அவர் ஏதோ கட்டாயத்தினால் தான் அவர் அவ்வாறு கூறுகிறார் என்று தெரியவந்தது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த

பிறகு 1ஆம் எதிரி என் தங்கையை திருமணம் செய்துகொள்ளவதாக இருந்தார் என்றால் சரியல்ல. என் தங்கை 1ஆம் எதிரியை திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என்றாலும் ஆகவே தான் 1ஆம் எதிரி திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியை பழிவாங்கும் நோக்கத்தோடு பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**நேரம் 15.40 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.